# வங்காலை பறவைகள் சரணாலயம் : நிலைத்திருக்கக்கூடிய முகாமைத்துவமும் அதற்கான சவால்களும்

ஏ.எஸ் சூசை / வீ. பிரதீபா

**ஆய்வுச்சுருக்கம்**

வடமாகணத்திலேயே அதிக உயிர்ப்பல்வகைமையைக் கொண்ட மாவட்டமாக மன்னார் மாவட்டம் காணப்படுகின்றது. இதில் மடு,கட்டுக்கரை,வங்காலை ஆகிய மூன்று பிரதேசங்கள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இதில் வங்காலை பறவைகள் சரணாலயமானது அதன் உயிர்ப்பல்வகைமையின் செழுமை கருதி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் ஒன்றாக "ரம்ஸார்உடன்படிக்கையினூடாக ௨௦௧௦ல் பிரகடனப்படுத்தபட்டது. இவ்வாறான முக்கியத்துவம் பெற்ற பகுதியின் நிலைத்திருக்ககூடிய முகாமைத்துவ செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது அவசியமான ஒன்றாகும். இச்சந்தர்ப்பத்தில் சரணாலயத்தின் நிலைத்திருக்கும் முகாமைத்துவ செயற்பாடு தொடர்பாக மக்களின் செயலாற்றல், மனோநிலை, வேறுபட்ட அரச நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் என்பனவற்றினூடாக சூழல் நிலைத்திருப்பில் எவ்வாறான சவால்களை எதிர் நோக்குகின்றது, என்பது பற்றி அறியும் நோக்கில் சரணாலய எல்லை நிர்ணயம் தொடர்பாக சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்ட தனிநபர் காணி உரிமையாளர்கள் அனைவரிடமும் நோக்க அடிப்படையிலான மாதிரி எடுப்பு முறைமூலம் திரட்டப்பட்ட தகவல்களையும் வேறுபட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடமிருந்தும், சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வின் மூலம், சூழற்பாதுகாப்பு தொடர்பான செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் நிறுவனங்களிடையே ஒருங்கிணைந்த செயலாற்றல் என்பது ஏற்படுத்தப்படாமையும் மற்றும் சூழல் முகாமைத்துவ செயற்பாடுகளில் மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டப்படாமை, மக்கள் குழுக்களை இணைத்துக் கொள்ளாமை போன்றன சரணாலய நிலைத்திருப்புக்கான சவால்களாக கண்டறியப்பட்டதுடன், சரணாலய எல்லை தொடர்பாக மக்களின் கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு அதேவேளை சரணாலய உயிர்ப்பல்வகைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலான எல்லை நிர்ணயம் தொடர்பான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** சரணாலயம், உயிர்ப் பல்வகைமை, சூழல் முகாமைத்துவம், மக்கள் பங்களிப்பு

உயிர்பல்வகைமைபேணுதலில் வன விலங்கு சரணாலயங்கள் முக்கியம் பெற்றவையாகக் காணப்படுகின்றன. இலங்கையினுடையஅமைவிடமும் அதன் பௌதீக அம்சமும் உயிர்ப்பல்வகைமையின் செழுமைக்குகாரணமாகஅமைகின்றது. அதன் காரணமாகஇலங்கையில் காணப் படும் ஈரநிலங்கள் சர்வதேசரீதியில் முக்கியத்துவம் பெற்றஈரநிலங்களாக "ரம்ஸா" உடன்படிக்கையால் (Ramsar,2010) பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் காட்டுத்திணைக்களம்,வனவிலங்குப் பாதுகாப்புத்திணைக்களம் போன்றன உயிரப்பல்வகைமையைபாதுகாக்கும் நோக்கில் இயற்கைஒதுக்குகள், வனவிலங்கு சரணாலயம், பாதுகாக்கப்பட்டபிரதேசங்கள்போன்றவற்றை

தாவரவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாத்துவருகின்றது. அந்த வகையில் இலங்கையில் 509 பகுதிகள் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக நிர்வகிக்கப்பட்டுவருகின்றது (Aijith, Silva, 2011). இவற்றில் பெரும்பாலான பகுதிகள் இலங்கையின் ஈரவலயத்தை உள்ளடக்கிய பிரதேசங்களிலேயே அமைவு பெற்றுள்ளது.

இலங்கையின் வறண்டவலயத்தை உள்ளடக்கிய வடமாகாணத்தில் சுண்டிக்குளம், கொக்கிளாய், வவுனிக்குளம், மடு, இராட்சதகுளம் (சுட்டுக்கரை) போன்றனசரணாலயங்களாக *1938* இல் பிரகடனப்படுத்தப்பட்டது (Asian Wetland Directory, 1989). இருந்தபோதிலும் உள்நாட்டு யுத்தம் காரணமாக அப்பகுதிகளில் எந்தவித பாதுகாப்பு முகாமைத்து வநடவடிக் கைகளையும் முன்னெடுக்க முடியவில்லை. உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மன்னார் மாவட்டத்தின் வங்காலைப் பிரதேசத் தை யண்டிய ஈரநிலப் பிரதேசத்தில் காணப்படும் உயிர் பல்வகைமையைக் கருத்திற் கொண்டு வனவிலங்கு பாதுகாப் புத்திணைக்களத்தால் *2008*ல் வங்காலை சரணாலயமாக பிரகடனப் படுத்தப் பட்டது (வர்த்தமானி பத்திரிகை, *2008*). இச்சரணாலயம் பொருளாதாரம் மற்றும் சூழலியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. பலஅருகிவரும் பறவையினங்களை பருவகாலங்கலங்களில் இச்சரணாலயத்தினுள் அவதானிக்கக்கூடியதாக உள்ளது. (Spot-billed Duck, Comb Duck, Gadwall, Long-toed stint, Peregrine Falcon, Common –ringed plover, Temmincks Stint, Red-necked Phalarope, Eastern Black –tailed Godwit) (இலங்கைப் பறவைகள் கழகம், *2010*).

பறவைகள் சரணாலயத்தின் எல்லைகள் நிர்ணயிக்கப்படும் போதுவங்காலைக் கிராமத்தின் ஒருபகுதி குடியிருப்பு நிலங்கள் சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்டது. இதற்கு மாற்றீடாக வேறுநிலம் பாதிக்கப் பட்டவர்களுக்குபகிர்ந்தளிக்கப்பட்டது. இருந்த போதிலும் சரணாலய எல்லை பற்றிபல்வேறு கோரிக்கைகள் மக்கள் மத்தியில் காணப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தில் சூழல் ரீதியாகஇச்சரணாலயத்தின்முக்கியத்துவத்தைக் கருத்திற் கொள்வதுடன், மக்களின் பங்களிப்பையும் பெற்று சூழற்பேணுகை செயற்பாட்டை முன்னெடுப்பதன் மூலமே சிறந்த முகாமைத்துவத்தை நடைமுறைப் படுத்தமுடியும். இவ் ஆய்வுவங்காலை சரணாலயத்தின் முகாமைத்துவம் தொடர்பாக எதிர்நோக்கும் சவால்களை இனங்கண்டு அதன் நிலைத்திருக்கக்கூடிய முகாமைத்துவத்திற்கான ஆலோசனைகளை முன்வைப்பதாக உள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

வங்காலை பறவைகள் சரணாலயத்தின் நிலைத்திருப்பு தொடர்பாக எதிர் நோக்கும் சவால்களை இனங்கண்டு கொள்ளுதலும், சரணாலய எதிர்கால நிலைத்திருப்பிற்கேற்ப சாத்தியமான வழிமுறைகளை ஆராய்ந்து அவற்றிகான தீர்வுகளை முன்வைப்பதும் இவ்வாய்வு நோக்கமாக கொண்டுள்ளது

**ஆய்வுப்பிரதேசம்**

வங்காலைசரணாலயமானதுமன்னார் மாவட்டத்தின்மேற்குக்கரையோரமாகமன்னார் தீவையும் பெருநிலப்பரப்பையும் இணைக் கின்ற ஈரநிலப் பகுதியை உள்ளடக்கி அமைவு பெற்றுள்ளது. ஈரநிலத்தை உள்ளடக்கியவங்காலை சரணாலயமானது, வடக்கே பள்ளிமுனையையும், கிழக்கே திருக் கேதீஸ்வரம், தெற்கே வங்காலை கிராமம், மேற்கே சவுத்பார் போன்றவற்றை யும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. கடற்புற்படுக்கைகள், முட்புதர்கள், புல்வெளிகள், குளம், மணற்கும்பி, கண்டற்தாவரங்கள் (கண்ணா, கண்டல், கிண்ணை), தழை, இராவணன்மீசை, விடத்தை, கடற்புற்கள் போன்றதாவரங்களும் உவர்சதுப்பு,

கடனீரேரி என்பவற்றை கொண்டு 4800ஹெக்ரர் பரப்பை உள்ளடக்கியுள்ளது. இதனுள் சதுப்பு நிலம் 1050 ஹெக்ரர் ஆகவும்,கண்டற்காடு 720 ஹெக்ரர் ஆகவும்,நீர்ப்பரப்பு 2030 ஹெக்ரர் ஆகவும் ,பருவகால மாற்றத்திற்கு உட்படும் பகுதிகளாக 1100 hak காணப்படுகின்றது. அத்துடன் வங்காலைக்கிராமத்தின் ஏறத்தாள 2:3 பகுதியையும் உள்ளடக்கியுள்ளது.இலங்கைபறவைகள் கழகத்தின் பரிந்துரையின் அடிப்படையில் 2008 செப்ரெம்பர்மாதம் வர்த்தமானியில் இது சரணாலயமாக அறிவிக்கப்பட்டது. வங்காலை கடற்கரையோரமாக காணப்படும் அடர்ந்தகண்டற்காட்டுச்சூழல் பருவகால இடம்பெயர்பறவைகளுக்கு குறிப்பாக ஐரோப்பாவில் இருந்து இடம் பெயரும் பறவைகளுக்கு புகலிடமாக விளங்குகின்றது. வங்காலைப் பிரதேசத்தில் ஏறத்தாழ 149 பறவையினங்கள் காணப்படுகிறது (இலங்கைபறவைகள் கழகம் இ2010) இதன் சிறப்புக்கருதிசர்வதேசரீதியில் முக்கியத்துவம் பெற்றஈரநிலப் பகுதிகளில் ஒன்றாக "ரம்ஸா" வால் 2010 ஆடி மாதம் பிரகடனப்படுத்தப்பட்டது (ரம் ஸா உடன்படிக்கை,2010). வங்காலைக்கடற்சூழற் தொகுதி ஏறத்தாழ 60ற்கு மேற்பட்ட மீனினங்களைக் கொண்டு பொருளாதார ரீதியில் முக்கியம் பெற்ற ஒன்றாக காணப்படுகிறது. அத்துடன் புராதானவரலாற்றுசிறப்புமிக்க அகழ்வாராட்சிப் பகுதியையும் (மாதோட்டம் திருக்கேதீச்சரம்) ஆகியவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.





படம்:01 ஆய்வுப்பிரதேச அமைவிடம்

**ஆய்வுப்பிரச்சினை**

வங்காலைபறவைகள் சரணாலயஎல்லையுள் வங்காலைக்கிராமத்தின் மேற்கெல்லையின் ஓர் பகுதி (வங்காலை வடக்கு, வங்காலை கிழக்கு) உள்வாங்கப்பட்டுள்ளதால் எல்லை நிர்ணயம் பற்றிவங்காலைக் கிராமமக்கள் சிலகோரிக்கைகளை விடுத்துவருகின்றனர். இவ் வெல்லை பாரிய அளவு அரச நிலத்தை உள்ளடக்கியிருந்த போதும் வங்காலைக் கிராமத்தின் எல்லைப் புறமாக தனியார் காணிகளும் உள்வாங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே வங்காலைக் கிராமத்தின் அபிவிருத்திக்கு நிலப்பற்றாக்குறை காணப்படும் சந்தர்ப்பத்தில் இவ் வெல்லையினுள் பொதுமக்களின் குடியிருப்புக்கானநிலம், வயல்நிலம், என்பவற்றுடன் மக்கள்

பாவனையில் இருந்தகிறிஸ்தவ தேவாலயம், விளையாட்டுமைதானம், கால்நடைப்பண்ணை, எரிபொருள் நிரப்பு நிலையம், முதியோர் இல்லம், பாடசாலை போன்றவற்றிற்கென ஒதுக்கப்பட்ட காணிகள் போன்றன உள்ளடக்கப்பட்டுள்ளது. இந் நிலையில் எல்லைமீள்நிர்ணயம் தொடர்பாகமக்கள் சிலகோரிக்கைகளைவிடுத்து வருகின்றனர். அத்துடன் எல்லைமேலும் விஸ்தரிக்கப் பட்டால் தங்களது குடியிருப்புக்களும் அதில் உள்வாங்கப்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வும் காணப்படுகிறது.

இவ்வெல்லைக்குள் சட்டரீதியற்ற செயற்பாடுகளாக கண்டற் தாவரங்களை அழித்தல், கழிவுகளைக் கொட்டுதல், மற்றும் சட்டரீதியற்ற மீன்பிடி போன்றன இடம் பெறுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்களின் பங்களிப்பு மற்றும் விழிப்புணர்வின்றி முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களின் எதிர்பார்த்த இலக்கு என்பது கேள்விக்குறியாகவே இருக்கும். மேலும் நிறுவனரீதியாக முன்னெடுக்கப்படும் சில அபிவிருத்தித் திட்டங்களும் சரணாலய உயிர்ப் பல்வகைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. இவ்வாறான விடயங்கள் சரணாலய முகாமைத்துவத்திற்கு ஓர் சவாலாகவே காணப்படுகினறது. எனவே இவ்வாறான பிரச்சினையைக் கருத்திற் கொண்டு இவ்வாய்வு முன்னேடுக்கப்பட்டுள்ளது.

**தரவும் தரவுப்பகுப்பாய்வும்**

இவ்வாய்விற்காகமுதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன் படுத்தப்பட்டுள்ளது. கள ஆய்வு, நேர்காணல், வினாக்கொத்து போன்றமுறைகள் முதலாம் நிலைத் தரவு சேகரிப்பதற்கான நுட்பங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வினாக்கொத்துஆய்வில் நோக்க அடிப் படையிலான மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டது. இங்குசரணாலய எல்லைக்குள் உள்ளடக்கப்படும் தனியார்காணி உரிமையாளர்கள் 140 குடும்பங்களாகக் காணப்பட்டது. அக்குடும்பங்கள் மத்தியில் ஒழுங்கு முறையான மாதிரி யெடுப்பு நுட்பத்தைப் பயன்படுத்தி 50% மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு (70 குடும்பங்கள்) வினாக்கொத்து மூலம் சரணாலயம் பற்றியமக்களின் மனோநிலை, எதிர்பார்ப்பு, விழிப்புணர்வு, எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பனபற்றியதகவல்கள் பெறப்பட்டது.

கள ஆய்வானது ஐப்பசி 2015 தொடக்கம் பங்குனி 2017வரை மேற்கொள்ளப்பட்டது. இக்காலப்பகுதிக்குள் இடம்பெயர்பறவைகள் அதிகளவில் தங்கும் காலப்பகுதிகள் இதங்குமிடங்கள் என்பன அவதானிக்கப்பட்டு பறவைகள் அதிகளவில் தங்கும் இடங்கள் படமாக்கப்பட்டது. அத்துடன் சரணாலய எல்லைக்குள் இடம்பெறும் மானிட செயற்பாடுகள் என்பன பற்றிய தகவல்களும் சேகரிக்கப்பட்டது.

வங்காலைக் கிராமத்தின் பாடசாலை அதிபர், கிறிஸ்தவ தேவாலய மதகுரு, கிராமசேவகர்,நில அபிவிருத்தி உத்தி யோகத்தர் போன்றோரிடமிருந்து கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலமும் சரணாலய முகாமைத் துவம், அதன் எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட முறை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளையும் ஏற்கனவே வெளியிடப்பட்ட இரண்டாம் நிலைத்தரவுகளையும் ஆதாரமாகக் கொண்டு பண்புசார் ரீதியில் விபரணப்பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகளும் ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளது.

## முடிவுகள்

சரணாலய எல்லைநிர்ணயம் தொடர்பாக மக்களின் கருத்தை அறியும் பொருட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப் படையில், சரணாலய எல்லை நிர்ண யிக்கப்படுவதற்கு முன்னர் மக்கள் சந்திப்போ அவர்களுடனான கலந்துரையாடல்களோ எதுவும் இடம் பெறவில்லை. வங்காலைக் கிராமத்தின் ஏறத்தாழ 2/3 பகுதி நிலம் சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதால் அதன் அபிவிருத்திக்கு நிலம் பற்றாக் குறையாக் காணப்படுவதும் ஓர் குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

சரணாலயஎல்லையோரமாகவாழும் மக்கள் அனைவரும் சரணாலயத்தின் முக்கியத்துவம் பற்றிஅறிந்திருந்த போதும் சரணாலயத்தை முகாமைசெய்வதில் மக்களின் பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் வகையிலான செயற்பாடுகள் ஏதும் முன்னெடுக்கப்படவில்லை என 92%.மான மக்கள் தெரிவித்திருந்தனர். இங்கு சரணாலய எல்லை நிர்ணயிக்கப் படுவதற்கு முன் மக்களிடம் ஓர் தெளிவான விளக்கத்தை வழங்கி மக்களிற்கு விழிப்பு ணர்வூட்டப்படவில்லை. இதனால் எதிர்காலத்தில் மீண்டும் சரணாலய எல்லைவிஸ்தரிக்கப் படுமானால் தமது குடியிருப்பு நிலங்களைதாம் இழக்க நேரிடும் என்ற அச்ச உணர்வு எல்லை நிர்ணயத்தால் பாதிக்கப்பட்ட அனைத்துமக்களிடமும் இருப் பதை அறியமுடிந்தது.


சரணாலய எல்லைக்குள் உள்வாங் கப்பட்ட குடியிருப்பு நிலங்களுக்கு மாற்றீடாக அனை வருக்கும் சரணாலய எல்லைக்குஅருகில் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளது (ஆனாள் நகர், அரச உத்தியோகத்தர் வீட்டுத்திட்டம்). எனினும் மக்களின் வயல் நிலங்கள் சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனாலும் தற்போது அந்நிலங்களில் வயற் செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிவழங்கப்பட்ட போதும் அது தொடர்பாக திருப்தியற்ற நிலையிலேயே மக்கள் காணப்படுகின்றனர். காரணம் அந்நிலங்களை விற்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது என்கின்ற மனோநிலையில் காணப்படுகின்றனர்.

இதனை விட சரணாலய எல்லைக்குள் ஓர் கிறிஸ்தவதேவாலயம், விளையாட்டு மைதானம், கால் நடைப்பண்ணை, எரிபொருள் நிரப்பு நிலையம், முதியோர் இல்லம், பாடசாலை போன்றவற்றிற்கென ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புக்களும் இதனுள் உள்வாங்கப்பட்டுள்ளது இதனைப் படம் 02 காட்டுகின்றது.

இதனால் தேவாலயத்தில் குறிப்பிட்ட நேரங்களுக்காவது வழிபாடுகளை மேற் கொள்வதற்கு அனுமதிகோரி மக்கள் வேண்டுகோள்விடுத்ததன் காரணமாக அதற்கான அனுமதி வழங்கப்பட்டு குறிப்பிட்ட நேரத்தில் மக்கள் வழிபாட்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது அவ்வாலயத்தை அசுற்றுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனம் அறிவித்துள்ளது. இதனை மக்கள் ஏற்றுக்கொள்ளாத மனோநிலையிலேயே காணப்படுகின்றனர்.

விளையாட்டு மைதானம், எரிபொருள் நிரப்பு நிலையம், பாடசாலை போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு மாற்றீடாக சரணாலய எல்லையை அண்டி நிலம் வழங்கப்பட்டுள்ள போதும், ஏனைய தேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்கு மாற்றுக்காணி ஒதுக்கப்படவில்லை.

மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களில் இருந்தும்,நேரடி அவதானிப்பின் மூலமும் சரணாலய எல்லைக்குள் மக்களின் அத்துமீறிய செயற்பாடுகள் இடம்பெறுவது அவதானிக்கப்பட்டது. சரணாலயபகுதிக்குள்




**மூலம்: கள ஆய்வு**

**படம் : 2 சரணாலய எல்லைக்குள் உள்வாங்கப்பட்ட தனியார் மற்றும் பொதுத் தேவைகளுக்கான காணிகள்**

கழிவுகொட்டுதல், ஈரநிலபல்வகைமை கொண்ட கண்டற்தாவரங்கள் அழிக்கப் படல் (படம் 03 அழிக்கப்பட்ட கண்டற் தாவரங்களைக் காட்டுகின்றது) மற்றும் சரணாலய எல்லைக்குட்பட்ட கடற் பிராந்தியங்களில் சட்டரீதியற்ற மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்றனவற்றை இனம் காணக் கூடியதாக இருந்தது. பாரியகண்டல் மரக்குற்றிகள் வெட்டப்பட்டு கடற்பகுதிகளுக்குள் இடப்படுகிறது. இதனால் அப்பகுதியில் அதிகமீன்கள் செறிவடையும். இவ்வாறு மரக்கொப்புகள் சிலமீனவர்களால் குறுகிய நோக்கம் கருதி கடலினுள் போடப்படு வதால் ஏனைய மீனவர்களின் மீன்பிடிவலைகள் சேதமாக்கப்படுகின்றது. இவ்வாறான நட வடிக்கைகள் மக்களின் விழிப்புணர்வற்ற செயற்பாடுகளையே காட்டுகின்றது.

2008இல் சரணாலயமாக பிரகடனப் படுத்தப்பட்ட போது அவ் எல்லையுள் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட் டிருந்தது. இது தற்போது மேலும் விஸ்தரிக்கப்பட்டு வேறுபட்ட பகுதிகள் இராணுவ தேவைக்காக கட்டிடங்கள் மற்றும் விருந்தினர்



**மூலம்: களஆய்வு**

**படம்:03: சரணாலய எல்லைக்குள் அழிக்கப்பட்ட கண்டற்றாவரங்கள்**

விடுதிகள்,தேனீர்ச்சாலைகள் போன்றன அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைப் படம் 02 காட்டுகின்றது. இச்செயற்பாடு தொடர்பாக மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் தமது காணிகளை சரணாலயத்திற்கென உள்வாங்கிவிட்டு இராணுவ தேவைக்கு பெருமளவு நிலத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்ற மனோநிலையும் காணப்படுகின்றது. இது தொடர்பாக சரணாலய எல்லைக்குள் இவ்வாறான செயற்பாடுகள் இடம் பெற்றுவரும் நிலையில் தங்களது கோரிக்கை தொடர்பாகசிறியளவு தூரம் எல்லையை மீள்நிர்ணயம் செய்யும் போது தங்களது கோரிக்கைகள் நிறைவு செய்யக்கூடிய யதாக இருக்கும் என மக்கள் கருதுகின்றனர். சரணாலய எல்லைக்குள் காணப்படும் இராணுவ முகாம், மற்றும் விமான இறங்குதுறை புகையிரதசேவை போன்ற செயற்பாடுகளும் பறவைகளின் இயல்பு நிலையை பாதிப்பதாகவுள்ளது.

சரணாலயத்திற்குள் கூடுதலாக இடம் பெயர் பறவைகளே அதிகம் பருவமாற்றத்திற்கேற்ப அங்கு வந்து தங்கிச் செல்கின்றது. குறிப்பாக வடகீழ்ப் பருவக்காற்று காலங்களிலேயே எமது பிரதேசத்திற்கு இடம் பெயர்கின்றது. குறிப்பாக கார்த்திகை இறுதிப்பகுதியில் இருந்து மாசிவரை அதிகம் தங்கிச் செல்கின்றது. ஏனைய காலப்பகுதியில் உள்ளூர்ப் பறவையினங்களை இங்கு அவதானிக்கமுடிகிறது. சுரணாலய எல்லைக்குள் குறிப்பிட்ட சில பகுதிகளிலேயே பருவ காலங்களில் அதிகம் தங்கிச் செல்வதை அவதான்க்கமுடிகின்றது இதனைப் படம் 04 காட்டுகின்றது.


மேலும்நிறுவனரீதியாகமுன்னெடுக்கப்படும் சிலசெயற்பாடுகளும் உயிர்ப் பல்வகைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகவே உள்ளது. உதாரணமாக தற்போதய காலநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய வறட்சி நிலையை



மூலம்: களஆய்வு
படம்:04 அதிகம் பறவைகள் தங்குமிடம்

சமாளிப்பதற்காக புதுப்பிக்ககூடிய சக்தி வளப்பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் நாட்டில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. அதன் ஓர் அங்கமாக தற்போது கடற்கரையோரங்களில் காற்றாலைகளை நிறுவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றது. ஊதாரணமாக வங்காலை சரணாலயத்தின் எல்லையை அண்மித்து மன்னார் தீவின் தெற்குக்கடற்கரையோரமாக காற்றாலைகள் நிறுவுவதற்கான திட்ட முன்மொழிவு தயாரிக்கப்பட்டு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பாக நோக்கின் ஐரோப்பாவில் இருந்து பருவகால மாற்றத்திற்கேற்ப இடம்பெயரும் பறவைகள் நீண்டதூரம் பயணித்து ஆசியாக் கண்டத்தை கடந்து இந்தியாவின் தென்கரையோரமாக வந்தடைந்து இராமேஸ்வரம், ஆதாம் பாலத்தினூடாக மன்னார்த் தீவை வந்தடையும் பாதைகளையண்டியே இலங்கை மின்சார சபையினால் காற்றாலைகளை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது இதனைப் பினவரும் படம் 05 காட்டுகின்றது.

இத்திட்டத்தினால் உயிர்ப்பர்வகைமைக்கு பாதிப்பு ஏற்படும் என்று கருதி பல்வேறு சூழலியலாளர்களின் எதிர்ப்பால் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.இது நிறுவன ரீதியிலான இணைந்த செயற்பாடின்மையையே




**பட:ம்: 05 காற்றாலை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டபிரதேசம்**

காட்டுகின்றது. குறித்த ஓர் நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் சூழற் பாதுகாப்புச் செயற்திட்டம் இன்னெரு நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் சூழற் பாதுகாப்புத் திட்டத்தைப் பாதிப்பதாகவுள்ளது என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டிய விடயமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் சரணாலய நிலைத்திருப்பிற்கு சவாலாகக் காணப்படுகின்றது.

**ஆலோசனைகள்**

சரணாலய எல்லைக்குள் இடம்பெறும் விழிப்புணர்வற்ற செயற்பாடுகளை குறைப் பதற்கு முதலில் மக்களுக்கு சரணாலயத்தின் முக்கியத்துவம் அதனை எவ்வாறு பாதுகாக்கலாம் எவ்வாறான செயற்பாடுகள்

பறவைகளின் இயல்பு நிலையை பாதிக்கும் என்பது தொடர்பாக பூரண விழிப்புணர்வு ஊட்டப்படவேண்டும்.

எல்லைக்குள் இடம்பெறும் விழிப்புணர்வற்ற செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு சரணாலய முகாமைத்துவத்துள் மக்கள் குழுக்களை ஒருங்கிணைத்துக் கொள்வதை உறுதிசெய்தல் வேண்டும்.

சரணாலய எல்லை நிர்ணயம் தொடர்பாக ஏற்படும் சாதக,பாதக விளைவுகளை முன் கூட்டியே மக்களுக்கு தெரியப்படுத்தி யிருத்தல் வேண்டும். ஆனாலும் தற்போதாவது இது தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்து மக்களின் கோரிக்கைகளை கவனத்திற் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுக்கப்படவேண்டும்.

தற்போது சரணாலய எல்லைக்குள் மக்களின் கோரிக்கைக்கு ஏற்ப சில செயற்பாடுகள் அனுமதிக்கப்பட்டுள்து. இவ்வனுமதிகள் கூட சரணாலய உயிர்ப்பல்வகைமைக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் எவ்வாறான செயற்பாடுகள் தவிர்க்கப்படவேண்டும் என்பது தொடர்பாக அம்மக்களுக்கு பூரணவிளக்கம் வழங்கப்படவேண்டும். உதாரணமாக பறவைகள் அதிகம் தங்கும் காலங்களில் கூடிய சத்தத்துடன் ஒலிபெருக்கி பாவனை, விவசாய செய்கைக்கு நிலத்தை பயன்படுத்தல், உழவியந்திரப்பாவனை போன்றன பறவைகளின் இயல்புவாழ்க்கையை குழப்புவதாக இருக்கும் எனவே இதுபற்றி தெளிவான விளக்கம் இருந்தால்த் தான் இவ்வாறான செயற்பாடுகளைத் தவிர்த்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இச்சரணாலயத்தினுள் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் பறவைகளை அவதானிப்பதற்கான (Bird Watching) ஒழுங்குகள் ஏற்படுத்தப் படுவதுடன், அப்பிரதேசத்தையண்டி சில உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளை விருத்தி செய்வதனூடாகவும் அதனை ஓர் சுற்றுலாமையமாக விருத்தி செய்வதனூடாக சூழற்பாதுகாப்பை உறுதி செய்வதனூடாக வும் வங்காலைக் கிராமமக்களும் பொருளாதார ரீதியாக நன்மையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் ஓர்பிரதேசத்தில் பாதுகாக்கப்பட்ட பிரதேசமோ அல்லது சரணாலயங்களோ அமைவு பெற்றுக்காணப்பட்டால் இவ் வெல்லையில் இருந்து 500m வரை எவ்வித மானிடச் செயற்பாடுகளும் இடம்பெறுவதை தவிர்த்துக்கொள்ளவேண்டும் (தேசிய சூழற் சட்டம்,2003) என்பது தேசிய சட்டமாக உள்ளது. இதனை மக்கள் விளங்கிக் கொள்ளவேண்டிய அதேவேளை வங்காலை கிராமத்தின் அபிவிருத்திக்கான நிலம் என்பது மிகவும் பற்றாக்குறையாக இருப்பதனால் எல்லை நிர்ணயம் தொடர்பாக அப்பகுதி மக்கள் அதிருப்தியுடன் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் மேலும் எல்லை விஸ்தரிக்கப்பட்டால் மேலும் தமது நிலங்கள் பறிபோகும் என்ற அச்ச உணர்வில் அனைத்து மக்களும் காணப்படுகின்றனர். இந்நிலைமையை போக்கி சரணாலய நிலைத்திருப்பில் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டும், பறவைகளின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத வகையிலும், கள ஆய்வின் மூலம் இனம் காணப்பட்ட பறவைகள் அதிகம் தங்குமிடங்களைஅடிப்படையாகக்கொண்டும், சூழற் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட எல்லையை சற்று முன்னோக்கி நகர்த்தக்கூடிய சாத்தியப்பாடுகள் இருப்பதனால் வங்காலைக் கிராமத்தின் தெற்குப் புறமாகக் காணப்படும் எல்லையை தற்போதய எல்லையிலிருந்து 0.75கி.மீ முன் நகர்த்துவதனால் பொதுத்

தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளும் இ விவசாய நிலங்களும் விடுவிக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றது படம் 06 புதிய எல்லையைக் காட்டுகின்றது.

இதனால் மக்களின் கோரிக்கைகள் நிவர்த்தி செய்யப்படுவதுடன் அவர்களினுடைய ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான சூழல் ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன.

சரணாலய எல்லைக்குள் பாதுகாப்பு நோக்கில் முன்னெடுக்கப்படும் தள்ளாடி இராணுவ முகாம் விஸ்தரிப்பு செயற்பாடுகளை மட்டுப்படுத்தப்படவேண்டும் என்பது இப்பகுதி மக்களின் வேண்டுகோளாக உள்ளது.

காற்றாலை நிர்ணயம் தொடர்பில் தெளிவானஇ ஆழமான சூழற்தாக்க மதிப்பீட்டறிக்கையுடன் ஒருங்கிணைந்த நோக்கில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் செயற்படவேண்டும். குறிப்பாக வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம்இ கடற்கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்இ மத்திய சுற்றாடல் அதிகார சபைஇ இலங்கை மின்சாரசபை போன்ற நிறுவனங்களிற்கிடையிலான ஒருங்கிணைந்த செயற்பாடு இடம்பெறுவதை உறுதிப்படுத்த வேண்டும். இவற்றினூடாக சரணாலய நிலைத் திருப்பிற்கேற்ற முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்.




**மூலம்: களஆய்வு**

**படம் :06 புதிய எல்லை நிர்ணயத்தைக் காட்டும் படம்**

**உசாத்துணை நூல்கள்**


1. Kotagama.S.W,Leonard pinto,Samarakoon.I(1989)Wetland in Srilanka: Asian wetland Directory,The World conservation Union(IUCN).538-595
2. Ajith,K. Silva.D.(2011).Description of Protected Area system, Action Plan for Implementing the Convention on Biological Diversity's Programme of Work on Protected Areas, Ministry of Environment ,Battaramulla.
3. Ramsar Convention Secretariat.(2017) , Ramsar sites
4. Available: http://www.ramsar.org/sites-Countries
5. Ceylon Bird Club.2013.Bird Watching sites
6. Available: http://www.bird and wildlifeteam.com
7. Gazette Notification of Srilanka. 2008.09.08, Srilanka Government Press
8. National Environmental Act,2003, Subsidiary Legisla